பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03 04 2024 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு எவ்வித புகாருக்கும் இடமின்றி நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

2. மக்களவைத் தேர்தலில் முந்தைய சாதனைகளை முறியடிக்கும் வகையில் பிஜேபி வெற்றிபெற தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்று அக்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

3. மத்தியில் ஆட்சிப்பொறுப்பேற்றால் நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

4. ரிசர்வ் வங்கியின் நடப்பு நிதியாண்டிற்கான முதலாவது இருமாத நிதிக்கொள்கைக்கான கூட்டம் இன்று மும்பையில் தொடங்கியது.

5. கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------ *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலை நேர்மையாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார், மாநில அரசுகளின் உயரதிகாரிகளுடன் இன்று காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

தேர்தல் பணிகளை பொறுத்தவரை இந்த ஆலோசனைக்கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு ராஜீவ்குமார் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் மாநில அரசுகளின் தலைமைச்செயலர்கள், காவல்துறை தலைவர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் உட்பட உயரதிகாரிகள் பங்கேற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வித புகாருக்கும் இடமின்றி வாக்குப்பதிவு நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு ராஜீவ் குமார் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இதற்கிடையே, நாடு முழுவதும் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்திலும் தேர்தல் ஆணையம் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

முதல் முறை வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவிகள் வாக்களிக்க உள்ளதை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் முந்தைய சாதனைகளை முறியடிக்கும் வகையில் பிஜேபி வெற்றிபெற தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நமோ கைபேசி செயலி வாயிலாக பிஜேபி தொண்டர்கள் பங்கேற்ற டிஜிட்டல் பேரணியில் அவர் உரையாற்றினார்.

பிஜேபி தொண்டர்களின் உற்சாகத்தை கண்டு எதிர்க்கட்சிகள் அச்சமடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

வாக்குச்சாவடி முகவர்கள் அனைவரும் திறம்பட பணியாற்ற வேண்டும் என்றும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றால், நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வுகாண பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால் காலியாக உள்ள அரசுப்பணியிடங்கள் உடனடியாக பூர்த்தி செய்யப்படும் என்று திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஒரு பெண் குழந்தைக்கான ஒதுக்கீட்டினை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் தேசிய செயலர் திரு **Binoy Viswam,** மத்திய கல்வியமைச்சர் திரு தர்மேந்திர பிரதானுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கும்போது, இந்த ஒதுக்கீடு தற்போது இடம்பெறவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய குடும்பத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் வழங்கப்பட்ட இந்த ஒதுக்கீட்டு முறையை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்றும் திரு **Binoy Viswam** அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

பிரபல குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங், காங்கிரஸிலிருந்து விலகி பிஜேபி-யில் இணைந்துள்ளார்.

புதுதில்லியில், பிஜேபி பொதுச்செயலாளர் திரு **Vinod Tawade** முன்னிலையில் அவர் அக்கட்சியில் இணைந்தார்.

நாட்டின் நலனை கருத்தில்கொண்டு தாம் பிஜேபி-யில் இணைந்ததாக திரு விஜேந்தர் சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மதுபானக்கொள்கை முறைகேடு வழக்கில், அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பினை தில்லி உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. இருதரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில். தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதையடுத்து, அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தலைமையிலான உயர்நிலைக்குழு கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

வெயில் காலத்தில் ஏற்படும் நோய்கள் குறித்தும், அதனை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கோடை வெயிலின் பாதிப்பிலிருந்து பொதுமக்கள் தங்களை காத்து கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து அமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மருந்துகளின் விலை 12 சதவீதம் வரை உயர்த்தப்பட உள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேசிய மருந்துப்பொருட்களுக்கான விலை ஆணையம் வருடந்தோறும் ஆய்வுக்கூட்டங்களை நடத்தி, விலையை மாற்றியமைப்பதாக குறிப்பிட்டுள்ளது.

ஒட்டுமொத்த விலை குறியீட்டின் அடிப்படையில் இந்த விலை மாற்றம் நடத்தப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போதுள்ள 752 மருந்துகளில், விலை மாற்றம் எதுவும் செய்யப்படாது என்றும் அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

54 மருந்துகளுக்கு மட்டும் ஒரு பைசா விலை உயர்வு அமல்படுத்தப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தீவிரவாத செயல்களுக்கு நிதியுதவி அளிப்பவர்களை சட்டத்தின்முன் நிறுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்புக்குழு கூட்டத்தில் உரையாற்றிய இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், தீவிரவாதத்தை ஒடுக்குவதில் சில நாடுகள் இரட்டை நிலைப்பாட்டை கடைபிடிப்பதாக குற்றம் சாட்டினார்.

தீவிரவாத செயல்களை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

தீவிரவாத செயல்களை ஒடுக்குவதற்கு தொழில்நுட்பங்கள் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகள் அனைத்தும் இதில் ஒருமித்து செயல்பட வேண்டும் என்றும் திரு அஜித் தோவல் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள தைவானில் வசிக்கும் இந்தியர்களுக்கான தொலைபேசி உதவி எண்களை இந்தியா தைபே சங்கம் அறிவித்துள்ளது.

0 9 0 – 5 2 4 7 9 0 6 என்ற தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளுமாறு அதன் செய்திக்குறிப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளூர் அதிகாரிகள் வெளியிடும் ஆலோசனைகளை இந்தியர்கள் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை நேரிட்ட இந்த நிலநடுக்கம் ஏழு புள்ளி நான்காக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர், இடிபாடுகளுக்கு இடையே 77 பேர் சிக்கியுள்ளனர், 700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

<<<<<<>>>>>

ரிசர்வ் வங்கியின் நடப்பு நிதியாண்டிற்கான முதலாவது இருமாத நிதிக்கொள்கைக்கான கூட்டம் இன்று மும்பையில் தொடங்கியது. இதில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சக்திகாந்த தாஸ் நாளை மறுநாள் அறிவிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 22-20 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Malvika Bansod**-ஐ வென்றார்.

-----------------

ஆசியக்கோப்பை மல்யுத்த சாம்பியன் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் **Udit, Akash, Rohit** உட்பட 10 பேரும், மகளிர் பிரிவில் **Anju, Shivani** உட்பட பத்து பேரும் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, கஜகஸ்தானின் **Bishkek -**ல் வரும் 11-ஆம் தேதி தொடங்கி 16-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது

**<<<<<<END>>>>>**